# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

# Tamil Study Centre - Mount Druitt

*Mobile: 0449 892 066*

*Email :mtdruittsc@gmail.com* *Web : www.mtsc.org.au*


செய்தி மடல் 2020 – 03 **25-07-2020**

"**எண்ணிய முடித்தல் வேண்டும்**
**நல்லவே எண்ண வேண்டும்**
**திண்ணிய நெஞ்சம் வேண்டும்**
**தெளிந்த நல்லறிவு வேண்டும்**
**நண்ணிய உரிமை வேண்டும்**
**நாமதை பெறவும் வேண்டும்**
**கண்ணிலே ஒளியும் வேண்டும்**
**கன்னித்தமிழைக் காக்க வேண்டும்**". ஆம் தற்போதைய சூழலில் தங்களதும் தங்களைச் சார்ந்தவர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதேவேளை மாணவர்கள் தமது வகுப்பறைக் கற்றல் நடவடிக்கையை மீண்டும் தொடர்வதற்கு எமது கல்வி நிலைய நிர்வாகம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. எனவே எதிர்வரும் 25.07.2020 சனிக்கிழமை முதல் தமிழ்ப் பாட வகுப்புகள் யாவும் கொலிடன் பாடசாலையில் நடைபெறும் என்பதை பாடசாலை நிர்வாகத்தினர் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றார்கள். எனவே மாணவர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்,

இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

1. ***எதிர்வரும் 25.07.2020 சனிக்கிழமை முதல் தமிழ் வகுப்புகள் யாவும் "Colyton Public School" பாடசாலையில் பெற்றோர்கள் மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கோவிட்-19 சம்பந்தமான தற்காலிக நிர்வாக அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு பணிவுடன் வேண்டிக்கொள்கிறோம்.***
    - பாடசாலை வளாகத்தினுள் உள்நுழையும் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் உடல் வெப்பநிலை பரிசோதிக்கப்படும்.
    - பாடசாலை நடைபெறும் நேரத்தில் பெற்றோர்கள் மற்றும் வெளியாட்கள் எவரும் பாடசாலை வளாகத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். தவிர்க்க முடியாத காரணமாக எவராவது அனுமதிக்கபடும் பொழுது அவர்களது உடல் வெப்பநிலை அவதானிக்கப்பட்டு அவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறும்வரை அவர்களுடன் ஒரு நிர்வாகக்குழு உறுப்பினர் உடன் செல்வார் என்பதையும் இங்கு தெரியப்படுத்த விரும்புகின்றோம்.
    - மாணவர் ஒன்றுகூடல் நடைபெறமாட்டாது, அத்துடன் இடைவேளையின் பொழுது மாணவர்களுக்கு சிற்றுண்டி மற்றும் குளிர்பானம் எவையும் வழங்கப்படமாட்டாது. மாணவர்களும் ஆசிரியர்களும் தங்களுக்குரிய சிற்றுண்டி தேநீர் மற்றும் குளிர்பானங்களை கொண்டுவருமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.
    - பாடசாலை வளாகத்தில் அமைந்துள்ள தண்ணீர் குழாய்களில் நீர் அருந்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.
    - மாணவர்கள் தங்கள் பாடப்புத்தகங்கள், பேனா, பென்சில் மற்றும் அப்பியாசக்கொப்பிகளை மறக்காது கொண்டுவருதல் வேண்டும். மவுண்ட்றூயிட் தமிழ் பாடசாலை நிர்வாகம் அனைத்து வகுப்பறை ஆசிரியர்களுக்கும் சுத்தம் சுகாதாரம் சம்பந்தமான அனைத்து பொருட்களையும் (Sanitiser, Soft Tissue and Wipes) தொடர்ந்து வழங்குவார்கள். அத்துடன் பாடசாலையில் உள்நுழையும் அனைவரும் எமக்கென ஒதுக்கப்பட்ட பிரத்தியோக குப்பைத்தொட்டிகளையே பயன்படுத்துமாறும் தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.
    - ஒவ்வொரு திங்கட்கிழமையும் மவுண்ட்றூயிட் தமிழ் பாடசாலை நிர்வாகம் நாங்கள் பயன்படுத்திய பொருட்கள் மற்றும் வகுப்பறை தொடர்பான விபரங்களையும் சுத்தம் செய்த விபரங்களையும் கொலிடன் ஆங்கில பாடசாலை அதிபருக்கு அறியப்படுத்துவார்கள்.
    - பாடசாலை வளாகத்தில் சிற்றூண்டிச்சாலைக்கு முன்னாக அமைந்துள்ள கழிப்பறைகளை மட்டுமே மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் பயன்படுத்துமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம். தமிழ் பாடசாலை ஆரம்பிக்க முன்னும் முடிவடைந்த பின்பும் ஒவ்வொரு வகுப்பறையும் மலசல கூடங்களும் மிகவும் அவதானமாகவும் முறையாகவும் எமது நிர்வாகக்குழு அங்கத்தவர்களால் சுத்தம் செய்யப்படும்.
    - பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு பிள்ளைகளை அழைத்து வரும்படியும் மற்றும் நிறைவடையும் நேரம் தாமதிக்காமல் அழைத்துச்செல்லுமாறும் அன்புடன் வேண்டிக்கொள்கிறோம். பாடசாலை வாயிலில் கூட்டம் கூடுவதை தவிர்த்து சமூக இடைவெளி அறிவுறுத்தல்களை பின்பற்றவும் தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- பாடசாலை வாகனத்தரிப்பிடம் பெற்றோர்களின் பாவனைக்கு அனுமதிக்கப்படுமிடத்து பெற்றோர்கள் வாகனத்திலேயே இருந்து பாடசாலையின் Covid-19 விதிகளை கடைப்பிடுப்பதற்கு ஒத்துழைக்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். இது தொடர்பான மேலதிக விபரங்கள் இச்செய்தி மடலுடன் இணைக்கப்பட்டுள்ளது.
- பெற்றோர்கள் ஆகிய நீங்கள் எமக்கு தவணை இரண்டில் எப்படி உங்கள் பிள்ளைகளை ZOOMஇல் தமிழை கற்பிப்பதற்கு உதவினீர்களோ அதேபோல் எதிர்வரும் சனிக்கிழமை தொடக்கம் உங்கள் பிள்ளைகளை Colyton பாடசாலையில் தமிழ் கற்பிப்பதற்கு கூட்டி வருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### 2. மாணவர்களது சுத்தம் சுகாதாரம்

நியூ சவுத்வேல்ஸ் கல்வித் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய மாணவர்கள் சமூக இடைவெளி கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக அவர்கள் பின்வரும் சுத்தம் மற்றும் சுகாதார அனுகுமுறைகளை பின்பற்றல் வேண்டும்.

- அடிக்கடி கைகளை சுத்தமாக சவர்க்காரம் கொண்டு கழுவுதல் வேண்டும்.
- தண்ணீர் மற்றும் உணவுப் பொருட்களை பகிர்ந்து உண்ணுவதை தவிர்த்தல் வேண்டும்.
- தும்மும் பொழுதும் இருமும் பொழுதும் முழங்கையால் முகத்தை மறைத்தல் வேண்டும். ரிசு உபயோகப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அவற்றை மறக்காமல் குப்பைதொட்டியில் போடவும்.



### 3. பேச்சுப் போட்டி – 15.08.2020 பி.ப. 1:00 மணி



எமது பாடசாலையின் வருடாந்த பேச்சுப் போட்டி எதிர்வரும் 15.08.2020 அன்று மாலை 1:00 மணி முதல் Mount Druitt Community Hall (87 Mount Druitt Road, Mount Druitt NSW 2770) மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும். அனைத்து பாடசாலை மாணவர்களும் பேச்சுப்போட்டியில் பங்குபற்ற வேண்டும் என்பது எமது குறிக்கோள். எனவே பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளுக்கு அவற்றை மனப்பாடம் செய்வதிலும் மற்றும் அதனை திறமையாக மேடையில் பேசுவதற்கும் உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### 4. ஆண்டு மலருக்கான நிழற்படம் எடுத்தல் - 15.08.2020



பேச்சுப்போட்டி நடைபெறும் தினமான எதிர்வரும் 15.08.2020 அன்று ஆண்டு மலருக்கான நிழற்படம் எடுக்க இருப்பதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் எமது கலாச்சார உடையணிந்து வருகைதருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். முதலாவதாக பேச்சுப்போட்டியில் பங்குபற்றும் முதலாம் வகுப்பு மாணவர்களின் நிழற்படம் எடுத்தல் 12.45 மணிக்கு பேச்சுப்போட்டி ஆரம்பமாவதற்கு முன்பாக நடைபெற இருப்பதால் அவ்வகுப்பு மாணவர்களை உரியநேரத்திற்கு சமூகமளிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### 5. அரையாண்டுப் பரீட்சை

மாணவர்களுக்கான **அரையாண்டுப் பரீட்சை** (எழுத்துப் பரீட்சை) தங்களது ஆசிரியர்களினால் ஒழுங்குசெய்யப்பட்டு இந்த தவணையில் நடைபெறும். எனவே பரீட்சை தொடர்பான விபரங்களை உங்களது பிள்ளைகளின் வகுப்பு ஆசிரியர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளவும்.

### 6. கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சை (Federation Exam)

தமிழ் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் வருடந்தோறும் நடாத்தப்படும் கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சை மூன்றாம்/ நான்காம் தவணையில் நடைபெறவுள்ளது. இது தொடர்பான விபரங்கள் தமிழ் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் அறிவிக்கப்பட்டவுடன் தங்களுக்கு தெரிவிக்கப்படும்.

### 7. பாடசாலை நேரம்

பிள்ளைகளை பாடசாலைக்கு பி.ப. 1.55 மணிக்கு அனுப்பிவைக்குமாறும், பாடசாலை முடிவடையும் போது தாமதமாகாமல் வந்து அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கின்றோம். இதன்போது தயவுசெய்து அரசாங்க சமூகஇடைவெளி நடைமுறையை பின்பற்றுமாறு தங்களை தயவாக கேட்டுக்கொள்கின்றோம்.

இது தொடர்பாக தங்களுக்கு ஏதேனும் பிரச்சனைகள் இருப்பின் உடனடியாக தங்களது வகுப்பு ஆசிரியருடன் அல்லது நிர்வாக உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| ஆரம்பமாகும் நேரம் : | பி.ப. 2.00 மணி |
| இடைவேளை : | (15 – 30 நிமிடங்கள் – தங்கள் வகுப்பு ஆசிரியர் இதனை ஒழுங்குசெய்வார்) |
| முடிவடையும் நேரம் : | பி.ப. 4.30 மணி |

### *8. மாணவர் வரவு*

மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தருவது அவர்களது கல்விக்கும், அமைச்சர் விருது பெறுவதற்கும், பாடசாலையின் வளர்ச்சிக்கும் மிகவும் முக்கியமானதாகும். அத்துடன் சமூகமொழிப் பாடசாலைகளிற்கு நியுசவுத்வேல்ஸ் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் மானியம் மாணவர்களின் வரவில் தங்கியுள்ளது. எனவே மாணவர்கள் தவறாமல் வருகைதரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

### *9. கலைவிழா*

எமது பாடசாலையின் வருடாந்த கலைவிழா பற்றிய தகவல்களை விரைவில் இன்னொரு செய்திமடல் மூலம் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

### *10. பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள்*

உங்கள் பிள்ளைகளுக்கான இந்த வருடத்திற்கான பாடசாலை கட்டணத்தை தவணை மூன்று முடியும் முன் செலுத்தி எமக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் இதுவரை கடந்த வருடத்திற்கான உங்கள் பிள்ளைகளுக்கான பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களான அதிஷ்ட இலாப சீட்டிழுப்பு, கலைவிழா பங்களிப்பு கட்டணங்கள் செலுத்த தவறியவர்கள் விரைவாக அதனை செலுத்தி பாடசாலை திறம்பட நடைபெறுவதற்கு ஒத்துழைக்குமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.




கடந்த வருடம் முதல் எமது பாடசாலை Creative Kids Registered Provider ஆக அங்கீகாரம் பெற்றுள்ளதால் நீங்கள் Creative Kids Voucher மூலமும் எமது பாடசாலைக் கட்டணத்தை செலுத்தலாம். எனவே பெற்றோர் கொடுப்பனவை நீங்கள் பணமாக அல்லது Creative Kids Voucher மூலம் செலுத்தலாம் என்பதை உங்களுக்கு அறியத்தர விரும்புகிறோம். மேலதிக விபரங்களுக்கு எமது கல்விநிலைய பொருளாளர் திரு.பே.மகேஸ்வரமூர்த்தி அவர்களை தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி இல : 0422 519 067)

### *11. மாணவர்கள் தமிழைக் கற்பதில் பெற்றோர்களின் ஈடுபாடு*

ஆசிரியர்கள் தமிழைக் கற்பித்தாலும் பெற்றோர்களே தங்கள் குழந்தைகளின் பிரதான கல்வியாளர்கள். எனவே பாடசாலைக்கும் வீட்டிற்கும் இடையிலான கூட்டு முயற்சியினாலேயே குழந்தையின் தமிழ் மொழி அறிவு வளரும் என்பதால் தமிழ் மொழி கற்பித்தல் பணியில் ஈடுபட பெற்றோர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அதாவது:

- தமிழில் குழந்தைகளுடன் முடிந்தவரை பேசுவது
- வீட்டுப்பாடம் மற்றும் பிற பாடசாலை நடவடிக்கைகள் மூலம் குழந்தைகளுக்கு வழிகாட்டுதல்
- குழந்தைகளின் முன்னேற்றம் குறித்து அதிபருடன் அல்லது வகுப்பு ஆசிரியருடன் கலந்துரையாடுவது
- பாடசாலை ஏற்பாடு செய்த சிறப்பு விழாக்களில் கலந்துகொள்வது
- பாடசாலை நடவடிக்கைகளில் பங்கேற்பது
- பாடசாலை நிர்வாகத்தில் இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவுவது

### *12. பெற்றோர் கலந்துரையாடல்*

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அறிவித்தலுக்கு அமைய ஒன்றுகூடுதல் தடையின் காரணமாக பெற்றோர் கலந்துரையாடல் இந்த தவணையில் நடைபெறமாட்டாது. நீங்கள் ஏதேனும் விடயங்களை நிர்வாகத்துடன் கலந்துரையாட விரும்பினால் எமது பாடசாலை அதிபர் திரு. பா.முரளீதரன் (02 9635 5095) அல்லது நிர்வாக தலைவர் திரு.தே.கில்பேட் (0415 788 466) அவர்களை தொடர்பு கொண்டு கலந்துரையாடி உரிய தீர்வினை பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் தங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம்.

### *13. கொரோனாவிலிருந்து பாதுகாப்பு (Covid-19 Safety and Wellbeing Supports)*

எமது பாடசாலை மாணவர்களுக்கு கொரோனாவிலிருந்து தங்களையும் தங்களை சார்ந்தவர்களையும் எவ்வாறு பாதுகாத்து நல்ல ஆரோக்கியமான வாழ்வை வாழ்வது எப்படி என்ற அறிவை ஆசிரியர்கள் தெரிவித்திருந்தார்கள். கொரோனா தொடர்பான மேலதிக விபரங்களுக்கு எமது பாடசாலை இணையத் தளமான ***www.mtsc.org.au*** நீங்கள் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

### *14. இணையத் தளம் (Webpage)/ முகப் புத்தகம்* facebook

எமது பாடசாலை இணையத் தளமான ***www.mtsc.org.au*** மற்றும் முகப்புத்தகம் தேவையான தகவல்ளைக் கொண்டதாக தரவேற்றப்பட்டு புதுப்பொழிவுடன் அனைவரும் பயன்பெறும் வகையில் பாடசாலையினால் பேணப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம். எமது பாடசாலை முகப்புத்தக முகவரி – https://www.facebook.com/groups/374995486577634/

### *15. மாணவர்களின் விபரங்கள்*

அனைத்து மாணவர்களின் கல்வி கற்கும் பிரதான பாடசாலை, வகுப்பு, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம், முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் WhatsApp செயலி விபரங்கள் அடங்கிய தரவுத்தளம் (Database) இதுவரை இவ்விபரங்களை பதிவு செய்யாத மாணவர்களது பெற்றோர்கள் உடனடியாக உப அதிபர் தே.சதீஸ்கரன் (0412067075) தொடர்பு கொண்டு பதிவு செய்யும்படி தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம் மற்றும் தங்களது பதிவில் ஏதேனும் திருத்தம் மேற்கொள்ள வேண்டியவர்களும் தொடர்பு கொண்டு திருத்தங்களை மேற்கொண்டு தங்களது சரியான தகவல்கள் பேணப்படுவதை உறுதிப்படுத்துமாறும் தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### *16.* **Zoom and Google Email ID**

மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் பாடசாலையுடன் கூடிய மின்னஞ்சல் முகவரி பாடசாலை நிர்வாகத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இவ் மின்னஞ்சல் முகவரியை எமது பாடசாலையின் தேவைக்கு மட்டுமே மாணவர்கள் உபயோகப்படுத்த வேண்டும். தயவுசெய்து மாணவர்கள் இதனை தங்களது சொந்த தேவைகளுக்கு பயன்படுத்த வேண்டாம் என கேட்டுக்கொள்வதுடன் இவ்மின்னஞ்சல் முகவரியை தவறான முறையில் பயன்படுத்துபவர்களின் பாவனையை தற்காலிகமாக இடைநிறுத்த அல்லது முற்றாக இடைநிறுத்த பாடசாலை நிர்வாகத்தி உரிமையுண்டு என்பதையும் இதனால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு பாடசாலை நிர்வாகம் பொறுப்பேற்கமாட்டாது என்பதையும் தங்களுக்கு தெரியப்படுத்த விரும்புகின்றோம். இது தொடர்பாக ஏதேனும் கருத்துக்கள் இருப்பின் பெற்றோர்கள் பாடசாலை நிர்வாகத்திடம் தெரிவிக்கலாம் என்பதையும் தங்களுக்கு அறியத்தர விரும்புகின்றோம்.

### *22. பாடசாலை விடுமுறை*

எமது பாடசாலையின் தவணை மூன்று எதிர்வரும் **26.09.2020** அன்றுடன் முடிவடைந்து தவணை நான்கு வருகின்ற **17.10.2020** அன்று ஆரம்பமாகும் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.





**"செந்நெல் மாற்றிய சோறும் — பசுநெய்**
**தேக்கிய கறியின் வகையும்,**
**தன்னிகர் தானியம் முதிரை — கட்டித்**
**தயிரோடு மிளகின் சாறும்,**
**நன் மதுரஞ் செய் கிழங்கு — கானில்**
**நாவிலினித்திடும் அப்பம்**
**உன்னை வளர்ப்பன தமிழா — உயிரை**
**உணர்வை வளர்ப்பது தமிழே! "**

**பாரதிதாசன்**